2. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.

(1) கர்நாடக மாநிலத்தில் தமிழர்கள் வெளியேற வேண்டுமென்று அச்சுறுத்தும் நிலை உருவாகியிருப்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. ஆ. நல்லசிவன் ஆகியோர் கர்நாடக மாநிலத்தில் தமிழர்களை வெளியேற்ற வேண்டுமென்று அச்சுறுத்தும் நிலை உருவாகியிருப்பது குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு அந்த விதியின் கீழ் வருகிறதென் பதைச் சுருக்கமாகத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவரவர்களே, கர்நாடக மாநிலத்திலே அண்மைக் காலமாக, தமிழர்களை வெளியேற்ற வேண்டுமென்று அச்சுறுத்தி இயக்கங்கள் நடத்தப்படுவதாகவும், சுவரொட்டிகள் ஒட்டப்பட்டி ருப்பதாகவும், அங்கே இருக்கும் மைனாரிட்டியினரான தமிழர்களுக்குப் பாது காப்பற்ற நிலைமைகள் ஏற்பட்டிருப்பதாகவும் தகவல்கள் கிடைத்திருக் கின்றன. அதுமட்டுமல்ல, குறிப்பாக, கர்நாடகத் தமிழ் கிருத்துவப் பொது நலச் சங்கத்திலிருந்து ஒரு குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். அதிலே கூட கிருத்துவ சமுதாயத்தைச் சேர்ந்த குருமார்களெல்லாம், அதாவது தமிழர்களெல்லாம் பதவிகளில் இருக்கக்கூடாது, தமிழ் நாட்டுக்காரர்கள் தமிழ் நாட்டுக்குச் சென்றுவிட வேண்டும், பெங்களூர் மாவட்ட மன்றத் தலைவர் தமிழராக இருக்கக்கூடாது, கன்னடியராக இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். 100 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட தூய ஆரோக்கிய அன்னையின் கோவிலில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளதாகவும், அங்கே தமிழே இருக்கக்கூடாது, தமிழ் போதிப்பவர்கள் இருக்கக்கூடாது, தமிழ் குருமார்கள் இருக்கக்கூடாது, கல்வி ஸ்தாபனங்களில் தமிழ் இருக்கக் கூடாது என்று சொல்லி போராட்டங்கள் நடத்துவதாகத் தகவல் வந்திருக் கிறது. ஒரு மாநிலத்திலே தமிழர்களைப் புறக்கணிக்கின்ற நிலை ஏற் பட்டால், தமிழ் மாநிலத்தில் அதனுடைய ரீஆக்ஷனாக வேறு மாநிலத்தவரை விரட்டக்கூடிய சூழ்நிலை ஏற்படும். அது மிகப் பெரியதொரு போராட் டத்தை, அமைதியற்ற சூழ்நிலையை உருவாக்கக்கூடும். எந்த மாநிலத்திலும் மொழி சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு இருக்கிறதென்பதற்கு அரசியல் சட்டத்தில் இடமிருக்கிறது. எனவே இதை எதிர்க்கின்ற வகையிலும், இந்த நிகழ்ச்சிகளைப் பற்றி விரிவாக விவாதித்து, நம்முடைய அரசாங்கம் இதில் என்ன செய்யலாமென்று முடிவெடுக்க, இந்த அவையின் அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு மேலவைத் தலைவாவர்களே, நம் நாட்டிலே 'Sons of the soil' மண்ணின் மைந்தர்கள் என்ற கொள்கையின் விளைவாக, தேசிய ஒருமைப்பாடு பேசும் அதே நேரத்தில், இப்படிப்பட்ட பிரச்சினைகளும் கிளப்பப்படுகின்றன. குறிப்பாக, தேசிய ஒற்றுமைக்காக மிகவும் பொறுப்பேற்றிருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் இப்படிச் செய்வது நல்லதல்ல. குறிப்பாக, இன்றைக்கு அஸ்ஸாமில் நடைபெறும் இயக்கங்களின் விளைவுகளைப்பற்றி நாடு கவலைப்படும்போது, அதை மேலும் தூண்டி விடுகிறார்களோ என்று நினைக்கும் அளவிற்கு நம் நாட்டுப் பிரஜைகளையே வெளி நாட்டினர் என்று கூறி, வெளி நாட்டினர் யார் என்று முடிவெடுக்க ஒரு இயக்கம் ஒன்று அல்லது 1-1/2 வருடங்கள் நடந்து, நாட்டுக்குத் தேவைப்படும் எண்ணெய் உற்பத்தி பாதிக்கக்கூடிய அளவிற்கு இருக்கும் போது, நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் இன உணர்வுகளை, மொழி உணர்வுகளைக் கிளப்பாமல் இருக்க வேண்டும். .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானம் கர்நாடகப் பிரச்சினையைப் பொறுத்தது.

திரு. ஆ. நல்லசிவன் : கர்நாடக முதல்வர் காங்கிரஸ் கட்சித் தலைவர் என்பது மட்டுமல்ல. அவர் ஒரு பொறுப்புள்ள நிலையில் இருப்பதால், இந்தப் பிரச்சினையைக் கிளப்பிவிட்டு, அதன் விளைவாகக் கர்நாடகத்திலே மறியல்களும், தமிழர்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகிறார்களென்று அஞ்சுகிற நிலைமையும் இருப்பதால், அதைப்பற்றி விரிவாக விவாதித்து, இதைத் தடுக்க மக்களிடம் தேசிய ஒற்றுமையை உருவாக்க, மேலவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கர்நாடக மாநிலத்தில் தமிழர்கள் வெளியேற வேண்டுமென்று அச்சுறுத்தப்படும் சூழ்நிலை உருவாகியிருக்கிறதென்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அவையிலே விவாதிக்க வேண்டுமென்றும், அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்றும் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்திய ஒருமைப்பாட்டுக்கு எவ்வளவு பெரிய அறைகூவல் விட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற விஷயத்தை கட்சிக்கு அப்பாற்பட்ட நிலையில் அனைவரும் உணர்ந்துகொண்டிருக்கிறார்கள். எனவேதான் இந்தப் பொருள்பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. விவாதத்தின்போது, திரு. யோகேந்திர மக்வானா, உள்துறை மாநில அமைச்சர் அவர்கள் சிறுபான்மையோருக்கு எதிராக போஸ்டர்கள் ஒட்டியிருக்கும் சமூக

விரோத சக்திகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டுமென்றும், இது குறித்து, சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகள் எடுத்துள்ளன, இனியும் தொடர்ந்து எடுக்குமென்றும் தெரிவித்தார். மேலும், கர்நாடக சட்டசபையில், அவைத் தலைவர் இது குறித்து யாரும் அரசுக்கு முறையீடு செய்யவில்லை என்றும், எனினும், சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார். தவிர, கர்நாடக அரசு, காவல் துறையில் இது குறித்து, ஒரு வழக்கு பதிவு செய்து, புலனாய்வு நடந்து வருகிறதென்றும் அவர் தெரிவித்தார். மேலே கூறியுள்ளவாறு கர்நாடகத்தில் தமிழர்களை அச்சுறுத்தும் வகையில் போஸ்டர்கள் ஒட்டியிருப்பது குறித்து, ஏற்கெனவே நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டு, கர்நாடக அரசும், உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. இனி இவ்வாறு நேராமல் தடுக்கப்படுமென்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. தவிர, பெங்களூரில் தமிழர்கள் தாக்கப்படுவது குறித்து புகார்கள் ஏதும் இவ்வரசுக்கு வரவில்லை. எனினும் நிலைமையை அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது. பிற மாநிலங்களிலுள்ள தமிழர் நலனைக் காக்க, இவ்வரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயங்காது. அந்த அளவிற்கு மாநில அரசு பிற மாநிலங்களோடு தொடர்பு கொண்டு மிக எச்சரிக்கையோடு கண்காணித்து வருகிற காரணத்தால், இது குறித்து மேலும் விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து அவை நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி, அனுமதி மறுக்கிறேன்.

(2) தமிழ் நாடு பட்டதாரி ஆசிரியர்கள் கழகம் 24—3—1981 முதல் உண்ணா விரதப் போராட்டம் நடத்துவது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன், திரு பா. ரா. தாமஸ், செல்வி அ. லீலாவதி, திரு செ. முத்து சாமி, திரு ஆ. நல்லசிவன், திரு க. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் தமிழ் நாடு பட்டதாரி ஆசிரியர்கள் கழகம் 24—3—1981 முதல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன் னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு அந்த விதியின்கீழ் வருகிறதென்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.